கனடா தமிழீழச் சங்கம்
**The Tamil Eelam Society of Canada**
**TESOC Multicultural Settlement Services** / பல் கலாச்சார குடியமர்வுச் சேவைகள்
1160 Birchmount Road, Unit 1A, Scarborough, ON, M1P 2B8
Tel: (416) 757-6043 Fax: (416)757-6851 Web: www.tesoc.org

# கனடாத் தமிழீழச் சங்க வேலை தேடற் பிரிவு நடத்திய நிதிசேர் விருந்து

கனடாத் தமிழீழச் சங்க வேலைதேடற் பிரிவானது 1998 யூலைத் திங்கள் 02 ஆம் நாள் முதல் செயற்பட்டு வருகின்றது. புதிய குடிவரவாளருக்குக் கனடியத் தொழிற் சந்தையை அறிமுகம் செய்து, அதன் இயல்புகளை விளக்கி, வேலை தேடும் வழி முறைகளையும் அதன் நுணுக்கங்களையும் கற்பித்து, வேலை பெற உதவுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

மேற்படி நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டாகக் கிழமை தோறும் வேலை தேடற் பயிற்சிப் பட்டறைகளை நடத்தி வருகின்றோம். இப்பயிற்சிப் பட்டறையில் கனடியத் தொழிற்சந்தை, தன்மதிப்பீடு, தன்விவரக் குறிப்புச் செய்தல், வேலை தேடும் வழிமுறைகள், விண்ணப்பம் நிரப்புதல், வேலை பெறுவதில் உள்ள தடைகளும் அவற்றைத் தாண்டுதலும், ஆட்சேர்ப்பு நடைமுறைகள் உழைப்போர் உரிமைகள், பெற்ற வேலையைப் பேணுதல் முதலிய விடயங்களை வேலை தேடுவோரோடு கலந்து உரையாடுகின்றோம்.

இதன் பின்பு பயிற்சிப் பட்டறையில் பங்கு கொள்வோருக்கு தன்விவரக் குறிப்புச் செய்து, தொழில் வழங்குநர்களுக்கு அனுப்பி. நேர்காணலுக்கு ஒழுங்கு செய்து, வேலை பெற்றுக் கொடுக்கின்றோம்.

கடந்த பதினோராண்டில் ஏறத்தாழ 4200 புதிய குடிவரவாளருக்கு வேலை தேடும் பயிற்சி அளித்துள்ளோம். இதில் ஏறத்தாழ 2600 பேருக்கு உடனடியாக வேலை பெற்றுக் கொடுத்துள்ளோம். மேலும் பலர் எம்மிடம் பெற்ற பயிற்சியின் துணையோடு தாமாக வேலை பெற்றுள்ளனர். ஏறத்தாழ 600 பேரை தொழில்சார் அமைப்புகளுக்கு அனுப்பியுள்ளோம். இன்னுமொரு 500 பேரை வினைத்திறன் மேம்பாட்டுக்கு அனுப்பியுள்ளோம்.

1998ஆம் ஆண்டில் இரண்டரைப் பணியாளரோடு தொடங்கியது. இப்பொழுது ஐந்து முழுநேர அலுவலரோடு இயங்கி வருகின்றது. எனினும், கனடாத் தமிழ்க் குமுகத்தின் தேவையை நிறைவேற்றுவதற்கு, மேலும் இத்திட்டத்தை முன்னோக்கி நகர்த்த வேண்டியுள்ளது. இவ்வாறு நகர்த்துவதற்கு வேலை தேடுவோரிடத்தும் தொழில் வழங்குநரிடத்தும் கூடுதலான விளம்பரம் செய்ய வேண்டியுள்ளது. விளம்பரத்துக்காகக் குடிவரவுத்துறை தரும் பணம் பற்றாக் குறையாக உள்ளது.

இப்பற்றாக்குறையை ஈடு செய்வதற்காக 2009 - 08 -22 ஆம் நாள் மாலை ஏழு மணியளவில் நிதிசேர் விருந்து ஒன்றை மேற்படி வேலைதேடற் கிளையினர் தமிழீழச் சங்க குமுக மண்டபத்தில் ஒழுங்கு செய்திருந்தனர்.